கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்
மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

MCOP No.46/2022 17.04.2025 ம.சா.2

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜ் | தொழில் | |
| த/பெ | ஆரான் | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| ஜாதி | | மாவட்டம் | |
| சமயம் | | | |

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. விபத்து வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்பதை காட்ட ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்து தொடர்பாக நான் போலீசாரிடம் புகார் அல்லது வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. காயம்பட்டவரை மருத்துவமனையில் சேர்த்ததாக எதுவும் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் இருப்பதை காட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரெக்கவரி வாகனம் எனக்கு தெரியும் ஆனால் அதன் பதிவு எண் எனக்கு தெரியாது. இறந்துபோன கலையரசு என்னுடைய பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்.

3. நான் விபத்தை நேரில் பார்த்திருந்தால் அது குறித்து போலீசாரிடம் புகார் அளித்திருப்பேன் என்றாலும் விபத்து கலையரசனின் கவனக்குறைவால் நடந்ததாகத் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றாலும் போலீசார் என்னை இந்த விபத்து சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றாலும் நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போன் மூலம் தகவல் ஏதும் கொடுக்கவில்லை.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.04.18 13:08:25 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.